Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, 2023 டிசம்பர் 01

**நெஸ்லே லங்கா நிறுவனம், ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் நிகழ்வில் தேங்காய் கொப்பரை தயாரிப்பு பிரிவில் 2021/2022 மற்றும் 2022/2023 ஆண்டுகளுக்கான மிகச் சிறந்த ஏற்றுமதியாளர் விருதை வென்றுள்ளது**

மேன்மைதங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்ற 25 வது ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் நிகழ்வில் தேங்காய் கொப்பரைத் துறையில் 2021/2022 மற்றும் 2022/2023 நிதியாண்டுகளுக்கான மிகச் சிறந்த ஏற்றுமதியாளர் என்ற விருதை நெஸ்லே லங்கா பெற்றுள்ளது. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மதிப்பிற்குரிய விருதுகள், நாட்டின் ஏற்றுமதித் துறையில் மிகச் சிறந்த பங்களிப்புக்களை வழங்கியுள்ள நிறுவனங்களுக்கு அங்கீகாரமளிக்கும் வகையில் வழங்கப்படுகின்றன.

“தேசிய ஏற்றுமதிகளை வலுப்படுத்துவதில் தொடர்ச்சியாக நாம் முன்னெடுத்து வருகின்ற முயற்சிகளுக்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளமை எமக்கு மிகுந்த கௌரவமளிக்கின்றது. சவால்மிக்க இக்காலகட்டங்களில், தொடர்ந்து மூன்று நிதியாண்டுகளாக ‘தேங்காய் கொப்பரை துறையில் மிகச் சிறந்த ஏற்றுமதியாளர்’ என்ற விருதைப் பெற்றுள்ளமை எமது அணியின் ஓயாத அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சிக்கு சான்று பகிர்கின்றது. எமது செயல்பாடுகள் மூலமாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு நேர்மறையான பங்களிப்புக்களையும், உள்நாட்டில் தெங்குத் தொழில்துறைக்கு ஆதரவளித்து, மேம்படுத்துவதையும், எமது விவசாய சமூகத்திற்கு நிலைபேண்தகு வாழ்வாதாரங்களை தோற்றுவிப்பதையும், அதேசமயத்தில் ஏற்றுமதிகள் மூலமாக அந்நிய செலாவணியை ஈட்டி, நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பினை வலுப்படுத்துவதையும் எம்மால் தொடர்ச்சியாக முன்னெடுக்க முடிகின்றமையை நான் பணிவுடன் குறிப்பிட விரும்புகின்றேன்,” என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. பேர்ண்ஹார்ட் ஸ்டெ.்.பான் அவர்கள் குறிப்பிட்டார்.

1986 ஆம் ஆண்டில் மெகி தேங்காய்ப் பால்மாவை அறிமுகப்படுத்திய நெஸ்லே, அன்றுதொட்டு 37 ஆண்டு கால செயற்பாடுகளின் மூலமாக இலங்கையில் 6,000 க்கும் மேற்பட்ட இலங்கை விவசாயிகளுக்கு ஆதரவளித்துள்ளதுடன், அவர்களது நலனை தொடர்ச்சியாக மேம்படுத்தி வந்துள்ளது. கடந்த ஆண்டில் 96 மில்லியனுக்கும் மேற்பட்ட தேங்காய்களை இந்நிறுவனம் கொள்வனவு செய்துள்ளதுடன், ரூபா 6.2 பில்லியன் தொகையை அதற்காக செலுத்தி கிராமிய சமூகங்களை மேம்படுத்தியுள்ளது. மேலும், இலங்கையில் தேங்காய்ப் பால்மாவை ஏற்றுமதி செய்யும் மிகப் பாரிய நிறுவனங்களில் ஒன்றாக, 2022/23 ஆண்டில் ஏற்றுமதி வருவாயாக ரூபா 10.72 பில்லியன் தொகையை இலங்கைப் பொருளாதாரத்திற்கு பங்களித்துள்ளது. மேலும், நெஸ்லே தெங்கு அபிவிருத்தித் திட்டத்தினூடாக, சமூகத்தின் நலனை மேம்படுத்தும் அதன் முயற்சியில் 4,500 கிராமிய குடும்பங்களுக்கு தனது ஆதரவை இந்நிறுவனம் வழங்கியுள்ளதுடன், இலவச கலப்பு தென்னம்கன்றுகள், தொழில்நுட்ப வழிகாட்டல், விரிவான பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அவர்களுக்கு வழங்கியுள்ளது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் ஏற்றுமதிகளுக்கான தலைமை அதிகாரியான டிஷான் விஜயவர்த்தன அவர்கள் கருத்து வெளியிடுகையில், “இந்த அங்கீகாரம் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளமையையிட்டு பணிவும், பேரானந்தமும் அடைந்துள்ளோம். நெஸ்லே தர உத்தரவாதத்துடன், எமது நுகர்வோருக்கு சௌகரியத்தை வழங்கும் நோக்குடன் மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் மெகி தேங்காய்ப் பால்மாவை நாம் அறிமுகப்படுத்தினோம். இலங்கையில் உள்ள குடும்பங்கள் மட்டுமல்லாது, உலகம் முழுவதும் 50 க்கும் மேற்பட்ட நாடுகளில் நுகர்வோரின் அபிமானத்தை வென்று, கடந்த மூன்று தசாப்தங்களாக இதன் வளர்ச்சியை நேரடியாக காண முடிந்ததையிட்டு மிகுந்த பெருமை அடைகின்றேன்!,” என்று குறிப்பிட்டார்.

நெஸ்லே நிறுவனம் 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை மக்களின் வாழ்வில் ஒரு அங்கமாகவே திகழ்ந்து வந்துள்ளது. இந்நிறுவனம் 90% க்கும் மேற்பட்ட தனது தயாரிப்புக்களை குருணாகலில் அமைந்துள்ள அதன் அதிநவீன தொழிற்சாலையில் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து வருவதுடன், கடுமையான பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு நடைமுறைகளின் கீழ் அவை உற்பத்தி செய்யப்படுகின்றன. ‘இன்றும் எதிர்கால தலைமுறைகளுக்காகவும், அனைவரின்

வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் உணவின் ஆற்றலை வெளிக்கொண்டு வருதல்' என்ற நோக்கத்தின் கீழ் தனது செயல்பாடுகளை முன்னெத்து வருகின்ற நெஸ்லே, பல்வகைப்பட்ட தனது உணவு மற்றும் பான வகை தயாரிப்பு வரிசைகள் மூலமாக இளமை முதல் முதுமை வரை தலைமுறை, தலைமுறைகளாக நுகர்வோரைத் திருப்திப்படுத்தி வருகின்றது.

---

**தொடர்புகளுக்கு:**


| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |